ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2493/38 - 2026 ජූනි මස 18 වැනි බ්‍රහස්පතින්දා - 2026.06.18
2493/38 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு யூன் மாதம் 18 ஆந் திகதி வியாழக்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்**

22ஆம் பிரிவின் கீழான கட்டளை

01. 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் (சட்டம்) 22ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராகிய அநுர குமார திசாநாயக்க ஆகிய நான், இக்கட்டளையின் மூலம்,

i. 2026 யூன் 18 ஆந் திகதி 2493/37 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தல்களில் வெளியிடப்பட்ட 2026ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க ஒழுங்குவிதிகளுக்காக வழங்கப்பட்ட பொதுவான அனுமதியின் நியதிகளுக்கமைய, ஆரம்ப புலம்பெயர் கொடுப்பனவின் கீழ் புலம்பெயர்ந்தொருவரின் மூலம் மேற்கொள்ளப்படும் வெளிமுகப் பணவனுப்பல்களை ஐ.அ.டொலர் 100,000 அல்லது ஏதேனும் வேறு பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை வரை மட்டுப்படுத்துகின்றேன்

ii. 2026 யூன் 18 ஆந் திகதி 2493/36 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தல்களில் வெளியிடப்பட்ட 2026ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க ஒழுங்குவிதிகளுக்காக (இதனகத்துப் பின்னர் 2026ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க ஒழுங்குவிதிகள்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) வழங்கப்பட்ட பொதுவான அனுமதியின் நியதிகளுக்கமைய இலங்கையில் வதிகின்ற ஆளொருவர் மூலம் வெளிநாடுகளில் முதலீடுகளை மேற்கொள்கின்ற நோக்கத்திற்காக பின்வருவன நீங்கலாக, வெளிமுக முதலீட்டுக் கணக்கு ஊடாக கொடுப்பனவுகளை மேற்கொள்வதை இடைநிறுத்துகின்றேன்:

(அ) வெளிநாடுகளில் தொழில் விரிவுப்படுத்தும் நோக்கத்திற்காக, பின்வரும் தகைமையுடைய இலங்கையில் வதிகின்ற ஆட்களினால் (முதலீட்டாளர்கள்) செய்யப்பட்ட நேரடி முதலீடுகள்:

1A - PG 7756- 403 (2026/06)
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

i. இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்று அல்லது இலங்கையின் ஏதேனும் வேறு சட்டத்தின் கீழ் இலங்கையில் தாபிக்கப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்று அத்துடன் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட கம்பனிகள், உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர் 750,000 வரை அல்லது ஏதேனும் வேறு பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை வரை, அல்லது பிந்திய நிதியியல் ஆண்டின் கணக்காய்வுசெய்யப்பட்ட நிதியியல் கூற்றுகளுக்கமைவாக முதலீட்டாளர் கம்பனியின் தேறிய சொத்துக்களின் 20 சதவீதத்திற்கு குறைவான அல்லது சமமான தொகை, இதில் எது குறைவானதோ அது

ii. இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்று அல்லது இலங்கையின் ஏதேனும் வேறு சட்டத்தின் கீழ் இலங்கையில் தாபிக்கப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்று அத்துடன் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்படாத கம்பனிகள், உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர் 200,000 வரை அல்லது ஏதேனும் வேறு பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை, அல்லது பிந்திய நிதியியல் ஆண்டின் கணக்காய்வுசெய்யப்பட்ட நிதியியல் கூற்றுகளுக்கமைவாக முதலீட்டாளர் கம்பனியின் தேறிய சொத்துக்களின் 20 சதவீதத்திற்கு குறைவான அல்லது சமமான தொகை, இதில் எது குறைவானதோ அது

iii. வங்கித்தொழில் மற்றும் நிதித்தொழிலை விரிவுப்படுத்துவதற்காக, 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் (திருத்தப்பட்டவாறு) அதன் கீழ் விடுக்கப்பட்ட துணைச் சட்டவாக்கத்திற்குமுட்பட்டு உரிமமளிக்கப்பட்டதுமானதொரு வங்கி.

iv. நிதித்தொழிலை விரிவுப்படுத்துவதற்காக, 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க, நிதித்தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அதன் கீழ் விடுக்கப்பட்ட துணைச் சட்டவாக்கத்திற்குமுட்பட்டு உரிமமளிக்கப்பட்டதுமானவொரு நிதிக் கம்பனி.

(ஆ) இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றினால் அல்லது இலங்கையின் ஏதேனும் வேறு சட்டத்தின் கீழ் இலங்கையில் தாபிக்கப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றினால் (முதலீட்டாளர்) மேற்கொள்ளப்படும் நேரடி முதலீடுகள் ஆயின், அத்தகைய முதலீடுகள், இலங்கைக்கு வெளியில் வதியும் ஆளொருவரிடமிருந்து முதலீட்டுக் கம்பனி மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட அனுமதிக்கப்பட்ட கடனொன்றினூடாக அத்துடன்/அல்லது இலங்கைக்கு வெளியில் வதியும் ஆட்களினால் குறைந்தது ஏழு வருட காலத்திலும் அல்லது முதலீட்டாளரினால் வழங்கப்பட்ட பங்குகளுடனும் படுகடன் பிணையங்களில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளின் பெறுகைகளினூடாக ஒட்டுமொத்தமாக நிதியளிக்கப்பட்டிருக்க வேண்டும்.

(இ) சட்டத்தினது ஏற்பாடுகளுக்கும் அத்துடன்/அல்லது 1953ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க நீக்கஞ்செய்யப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்திற்கும் இணங்க அந்நாட்டில் முதலீட்டாளரினால் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் மீது ஏற்புடைய முதலீட்டினைப் பெறுகின்றவரின் நாட்டின் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளை நிறைவுசெய்வதற்கு தகைமையுடைய இலங்கையில் வதியும் (முதலீட்டாளர்) தகைமையுடைய ஆளொருவரினால் மேற்கொள்ளப்படும் தொடர்ந்து வருகின்ற முதலீடுகள்.

(ஈ) குடியகல்வோர் மற்றும் தேசத்தவரல்லாதவர் நீங்கலாக, தகைமையுடைய வதிகின்ற தனிப்பட்டவர்களின் மூலம் ஊழியர் பங்குச் சொத்தாண்மைத் திட்டத்தில் அல்லது ஊழியர் பங்குத் தெரிவுத் திட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள்.

iii. வெளிநாடுகளில் தொழில் விரிவுபடுத்தல் நோக்கத்திற்காக இலங்கையில் வதிகின்ற ஆளொருவரினால் வைத்திருக்கப்படுகின்ற வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகள் ஊடாக மூலதனக் கொடுக்கல்வாங்கல் மீதான வெளிமுகப் பணவனுப்பல்களை உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர் 500,000 அல்லது ஏதேனும் வேறு பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை வரை மட்டுப்படுத்துகின்றேன்

iv. இலங்கையில் வதிகின்ற ஆளொருவரினால் வைத்திருக்கப்படுகின்ற தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக கணக்குகள் ஊடாக மூலதனக் கொடுக்கல்வாங்கல் மீதான வெளிமுகப் பணவனுப்பல்களை உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர் 25,000 வரை அல்லது ஏதேனும் வேறு பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை வரை மட்டுப்படுத்துகின்றேன்

02. மேலேயுள்ள பந்திகள் I.II. மற்றும் I.III இன் கீழ் வெளிநாட்டு முதலீடுகளை மேற்கொள்ளும் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றினால் அல்லது இலங்கையின் ஏதேனும் வேறு சட்டத்தின் கீழ் இலங்கையில் தாபிக்கப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்று, பணிப்பாளர் சபையின் மூலம் நிறைவேற்றப்பட்ட தீர்மானமொன்றின் மூலமும், மேலேயுள்ள பந்திகள் 1.II.(ஈ)இன் கீழ் வெளிநாட்டு முதலீடுகளை மேற்கொள்ளும் தகைமையுடைய தனிப்பட்ட ஆளொருவர், சுய பிரகடனமொன்றின மூலமும், ஏற்புடையவிடத்து, அத்தகைய முதலீடுகள், இக்கட்டளையில் வழங்கப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதனை வெளிமுக முதலீட்டாளர் கணக்குகள் வாயிலாக எந்த அதிகாரமளிக்கப்பட்ட வணிகருடாக வெளிமுக பணவனுப்பல்கள் செய்யப்படவுள்ளதோ அந்த அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு உறுதிசெய்தல் வேண்டும்.

03. மேலே குறிப்பீடுசெய்யப்பட்ட 1.II (ஆ)ஆம் மற்றும் 1.II (இ)ஆம் வகைகளுக்குள் உள்ளடங்கும் முதலீடுகள், 2026ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க ஒழுங்குவிதிகளில் வழங்கப்பட்ட பொதுவான அனுமதியின் கீழ் குறித்துரைக்கப்பட்ட வரையறைகளை விஞ்சுகின்ற பட்சத்தில் சட்டம் 7ஆம் பிரிவின் (10)ஆம் உபபிரிவின் நியதிகளின் பிரகாரம் அனுமதி வழங்குவதற்கு இலங்கை மத்திய வங்கியினால் பரிசீலனையில் கொள்ளப்படலாம்

04. இக்கட்டளை 2026 யூன் 20 தொடக்கம் ஆறு (06) மாதங்களைக் கொண்ட காலப்பகுதிக்கு செல்லுபடியானதாகவிருக்கும்.

05. 2025 திசெம்பர் 18ஆம் திகதியிடப்பட்ட 2467/67ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தல்களில் வெளியிடப்பட்ட கட்டளையின் கீழ் மேற்கொள்ளபட்ட எதற்கும் முற்கற்பிதமின்றி இத்தால் நீக்கப்படுகின்றது.

06. இக்கட்டளையின் நோக்கங்களுக்காக,

I. "நேரடி முதலீடுகள்" என்பதன் பொருள்.

(அ) இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பனியின் வாக்களிக்கும் உரிமையின் பெரும்பான்மையினைக் கொண்ட முதலீட்டாளருக்கு உரித்தளிக்கின்ற அல்லது வேறுவகையாக அத்தகைய கம்பனியின் பணிப்பாளர்களின் அல்லது அதற்கு சமனான முகாமைத்துவ பதவிகளிலுள்ளவர்களின் பெரும்பான்மையாளரொருவரை நியமிப்பதற்கான உரிமையினை அல்லது சட்டரீதியாக பிணிக்கப்பட்ட உடன்படிக்கைகளினூடாக அல்லது ஏற்பாடுகளினூடாக அத்தகைய கம்பனியின் கூட்டாண்மை தீர்மானங்களைக் கட்டுப்படுத்துவதற்கான ஒப்பந்தரீதியிலான அல்லது சட்டரீதியான உரிமையினை அளிக்கின்ற இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பனியினால் வழங்கப்படும் சாதாரண பங்குகளில் மேற்கொள்ளப்படும் முதலீடுகள் அத்துடன்/அல்லது

(ஆ) தகைமையுடைய ஆட்களினால் வெளிநாட்டு அலுவலகங்களில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள்

II. "தொழில் விரிவுபடுத்தல்" என்பதன் பொருள், ஒன்றில்:

(அ) ஏற்கனவே காணப்படுகின்ற உற்பத்தி பிரிவுடன் அல்லது சேவைப் படைப்புகளுன் நேரடியாகத் தொடர்புடைய செயற்பாடுகளை விரிவுபடுத்தல். தயாரித்தல்/சேவை இயலளவை அதிகரித்தல் அல்லது ஏற்கனவே காணப்படுகின்ற தயாரிப்புகளின் அல்லது சேவைப்படைப்புகளின் பிரிவினுள் வழங்கப்படும் உற்பத்திகளின் அல்லது சேவைகளின் வீச்சினை விரிவுபடுத்தல் என்பவற்றை இது உள்ளடக்குகின்றது. அத்துடன்/அல்லது

(ஆ) விநியோகச் சங்கிலியூடாக நடவடிக்கைகளை நிலைக்குத்தாக ஒருங்கிணைத்தல். இது ஒன்றில்:

i. ஏற்கனவே காணப்படுகின்ற உற்பத்தி பிரிவில் அல்லது சேவை வழங்கல்களில் பயன்படுத்தப்படுகின்ற மூலப்பொருட்களை அல்லது கூறுகளைப் பெற்றுக்கொள்வதுடன் நேரடியாகத் தொடர்புடையதாகக் காணப்படுகின்ற பின்நோக்கிய ஒருங்கிணைத்தலை அத்துடன்/அல்லது

ii. இறுதி வாடிக்கையாளருக்கு அண்மித்து நிறுவனங்களை கையகப்படுத்துவதை அல்லது கட்டுப்படுத்துவதை தாபிப்பதை அமைக்கின்ற, களஞ்சியப்படுத்தல், சந்தைப்படுத்தல் மற்றும் ஏற்கனவே காணப்படுகின்ற உற்பத்திகளை அல்லது சேவைப் படைப்புகளின்சில்லறை விற்பனைகள் உள்ளடங்கலாக விநியோகத்துடன் நேரடியாகத் தொடர்புபட்ட நடவடிக்கைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ள முன்நோக்கிய ஒருங்கிணைத்தலை,

உள்ளடக்கலாம்.

III. "வெளிநாட்டு அலுவலகங்கள்" என்பது இலங்கைக்கு வெளியில் தாபிக்கப்பட்ட கிளை, ஒருங்கிணைப்பு, சந்தைப்படுத்தல், முகவராண்மை, கருத்திட்டம், பிரதிநிதி அல்லது வேறு அதனையொத்த அலுவலகங்கள் எனப் பொருள்படும்.

IV. "உரிமம்பெற்ற வங்கி" என்பது 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் சொற்பொருளுக்குள் உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்று அல்லது உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியெனப் பொருள்படும்

V. "உரிமம்பெற்ற நிதிக் கம்பனி" என்பது நிதித்தொழிலை நடாத்துவதற்காக, 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் கீழ், திருத்தப்பட்டவாறு. உரிமம்பெற்ற நிதிக் கம்பனியெனப் பொருள்படும்.

VI. "தேறிய சொத்துக்கள்" என்பது கம்பனியின் கணக்காய்வாளரினால் உறுதிப்படுத்தப்பட்டவாறு அதன் மொத்தப் பொறுப்புக்களின், மீள்விலைமதிப்பீட்டு ஒதுக்குகளின் அத்துடன் சீர்மதிப்புப் பெறுமதி ஒதுக்குகளின் மொத்தத்தைக் கழித்து முதலீட்டாளரின் மொத்த சொத்துக்களின் விலைமதிப்பு எனப் பொருள்படும்.

**ஒப்பம்: அநுர குமார திசாநாயக்க**
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார
அபிவிருத்தி அமைச்சர்

கொழும்பு,
2026.06.18

ECG 06 - 0248

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது